தொலைந்து போதல்

இப்படிச் செருப்பு போட்டுச் சத்தம் வர ரோட்டில் நடப்பவர்கள் சிலர்தான் இருக்கக் கூடும். அப்பாவாகத்தான் இருக்கும் என அவளுக்குத் தோன்றியது. தெரு இருளில் நிறைந்து போயிருந்தது. பின்னிரவு நீண்டு போய்க்கொண்டிருந்தது.

அப்பா இதுவரை வராமல் இருந்ததில்லை. எப்போதாவது சில நாள்களில் ஆபீஸிலேயே இருந்துவிடும் பட்சத்தில் யாராவது வந்து சொல்லிவிட்டுப் போவார்கள். அல்லது அவரே வந்து சொல்லிவிட்டுப் போவார்.

இன்றைக்கு அப்பா எங்கே போயிருப்பார் எனத் தெரியவில்லை. செகண்ட் ஷோ விட்டு மெயின் ரோட்டில் ஆட்கள் போகும் சத்தம் கேட்டது. விட்டு விட்டுக் கேட்கும் சைக்கிள் மணி சத்தமும் கேட்டது. சினிமாவுக்குப் போயிருப்பாரோ? அப்பா சினிமாவுக்குப் போவதே கிடையாதுதான்.

அவர்கள் தெருவுக்குள் மணிச் சத்தம் கேட்க சைக்கிள் ஒன்று வந்தது. யாரோ சிகரெட் பிடித்தபடியே சைக்கிளில் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அவர்கள் வீட்டுக்கு வரும் முன்பே சைக்கிளின் பின்னாடி இருந்தவன் குதித்துக்கொண்டான். அவன் பேசும் சத்தம் கேட்டது.

''கதவு திறந்திருக்கு, அக்கா இருக்கா, மூர்த்தி காலையில அங்கே வந்துரு. பாக்கு வெச்சிருக்கியா, கொடு.''

சைக்கிள் திரும்பிப் போன பின்பு அவன் வாசலுக்கு வந்தான். தலைமுடி தாறுமாறாகக் கலைந்து கிடந்தது. முழுக்கைச் சட்டையை மடக்கி விட்டிருந்தான். உயரமாக இருந்தான்.

''மணி, எங்கேடா போயிருந்தே?''

''சினிமாவுக்கு...''

''அப்பா ஆபீஸ் வழியா வந்தியா. அவரை இன்னும் காணோம். போய்ப் பார்த்துட்டு வாயேன்.''

''வருவாரு. எங்கே ஓடியா போகப் போறாரு. அந்த வக்கீல் ஒரு முசுடு. இந்நேரம் போய்க் கதவைத் தட்டினா வைவாரு.''

சட்டையைக் கழற்றிக் கொடியில் போட்டுவிட்டு உள் விளக்கைப் போட்டான். ஆளுக்கொரு பக்கமாகப் படுத்துக் கிடந்தார்கள். அம்மா சமையற்கட்டு வாசல் நிலையில் தலையை வைத்துப் படுத்துக் கிடந்தாள். ரமணி, பிரபா இரண்டு பேரும் ஒருவர் மேல் ஒருவர் காலைப் போட்டபடி உறங்கிப் போயிருந்தார்கள்.

''சாப்பிட்டியா, சாப்பாடு வைக்கவா?'' என்றாள்.

''மூர்த்தி வீட்டுல சாப்பிட்டேன்.''

அவன் படுக்கையைத் தூக்கிக்கொண்டு மொட்டை மாடிக்குப் போனான். அவளுக்குத் தூக்கம் வரவில்லை. முன் கதவைச் சாத்திவிட்டு உள்ளே வந்து படுத்தாள். அப்பாவுடைய கல்யாணப் போட்டோ எதிர்ச் சுவரில் இருந்தது. அப்பா ரொம்பவும் சிதைந்து போய்விட்டார் எனத் தோன்றியது.

இந்த வீட்டுக்கு வருவதற்கு முன்பு வக்கீல் வீட்டையொட்டிய ஒரு வீட்டிலே இருந்தார்கள். அப்பா வக்கீல் ரூமையொட்டிய சின்ன அறையில் உட்கார்ந்து இருப்பார். மைக்கூடு, பேனா, பெரிய வால்யூம் புத்தகங்கள் சூழ்ந்துகொண்டிருக்கும். எப்பவாவது உள்ளே போனால் மேஜையையொட்டிய நாற்காலியை இழுத்துப் போட்டு உட்காரச் சொல்வார். எப்பவாவது அப்பா சிரிப்பார். அந்தச் சிரிப்பு ரொம்பவும் அபூர்வமாக இருக்கும். இப்போதெல்லாம் அவர் சிரிப்பதேயில்லை.

சில நாள்களுக்கு முன்பு கூடப் பார்த்தாள். தூக்கம் பிடிக்காமல் புரண்டு படுத்தபோது, சுவரில் சாய்ந்து உட்கார்ந்தபடியே இருளில் உறைந்துபோயிருந்தார். அவராகவே பேசிக் கொண்டது போல் தோன்றியது. விரல்களில் எதையோ கூட்டிக் கணக்குப் போட்டுக்கொண்டிருந்தார்.

அவள் எழுந்து உட்கார்ந்ததும் அவரே கேட்டார்:

''என்னம்மா... தூக்கம் வரலையா..?''

''நீங்க தூங்கலையாப்பா?''

அப்பா சிரித்தார். அவள் கிட்டத்தில் வந்து உட்கார்ந்து கொண்டார்.

''உன் வேலைய நிரந்தரமாக்கிடுவாங்களா?''

''தெரியலேப்பா...''

''ரமணி எப்படிப் படிக்கிறா?''

அப்பா எப்போதும் அவளோடு பேசியதில்லை. அவள் அப்பாவைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவரே பேசினார்.

''உங்க அம்மாவுக்கு எம்மேல கோவம்மா. என்னால இயலலேன்னு. அவ நிறைய எதிர்பார்த்தா... உங்க யாருக்குமே நான் எதுவும் செய்ய முடியலேம்மா... பார்க்கலாம்.''

அப்பாவின் குரல் உடைந்துபோனது.

தெரு ஏக இரைச்சலாக இருந்தது. யாரோ வாசலில் நின்று கூப்பிட்டதுபோல் இருந்தது. காலையின் வேகம் தெருவெங்கும் விரிந்து கிடந்தது. அப்பா ஆபீஸிலிருந்து யாரோ வந்திருந்தார். அவளே வெளியே வந்தாள்.

''உங்க அப்பா சம்பளம் வாங்காமப் போயிட்டாரு. வக்கீல் ஐயா கொடுத்து அனுப்பினாரு. எங்கே உங்க அப்பா? நேத்து சாயங்காலமே புறப்பட்டுப் போய்ட்டாரே... உடம்புக்குச் சரியில்லையா?''

அப்பாவுக்கு என்னவாகியிருக்கும்? அவளுக்குள் நூல் பிரிந்தது போல் இருந்தது. அப்பா எங்கேனும் உடம்பு சரியில்லாமல் விழுந்திருப்பாரோ அல்லது வேறு ஏதாவது?

அம்மாவிடம் சொன்னதும் அம்மா அழ ஆரம்பித்தாள். அவள் அழுவதைப் பார்த்ததும் ரமணியும் பிரபாவும் அழுதார்கள். எதிர்பாராத இறுக்கம் அறையெங்கும் இறுகிப்போனது. மணியைக் கூப்பிட்டாள்.

''மணி, ராமசாமி சார் வீட்டுல கேட்டுட்டு வாயேன். நான் சித்தப்பா வீட்டுக்குப் போய் கேட்டுட்டு வரேன்.''

மணி கிளம்பி வெளியே போனதும், தலையைச் சரிசெய்து கொண்டு தெருவில் இறங்கிப் போனாள். தெருவில் காலை வெயில் நிறைந்து உறைந்துபோயிருந்தது. சித்தப்பா வீடு நிறைய சந்துகளைத் தாண்டி இருந்தது. அவள் போனபோது வாசலில் கலா நின்றுகொண்டிருந்தாள்.

''வாங்க அக்கா, உள்ளே வாங்க...'' என்றாள்.

அவள் உள்ளே போனபோது சித்தப்பா குளித்துவிட்டு நின்றிருந்தார். அவளைப் பார்த்ததும் கிட்டத்தில் வந்தார்.

''என்னம்மா கோமதி... என்ன இந்நேரத்தில..?''

''அப்பாவைக் காணோம்...''

''எப்போ இருந்து?''

''ராத்திரி வரலே... ஆபீஸ்லேருந்து நேத்து சாயங்காலமே கிளம்பிட்டாராம்.''

சித்தப்பா பேசாமல் இருந்தார்.

பின்னர் பேசினார்: ''பயப்படாதே, எங்கே போகப் போறார். போன வாரம் வந்தார். நிறைய கடன் இருக்குன்னாரு. அவசரமா ரூபா வேணும்னாரு. என்ன விஷயம்? வீட்டைக் கூட ஒத்தி வெச்சுட்டதா கேள்விப்பட்டேன்.''

அவள் பேசாமல் இருந்தாள். சித்தப்பா மூலையிலிருந்த போனை எடுத்துச் சுழற்றினார். யாருடனோ பேசிவிட்டு வைத்தார்.

''சாயங்காலம்... ரயில்வே ஸ்டேஷன் பக்கம் பாத்தாங்களாம். ஒருவேளை மதுரைக்குப் போயிருப்பார். நீ வீட்டுக்குப் போம்மா.. பயப்படாதே!''

அவள் போவதற்குள் வீட்டில் மணி இருந்தான். ''அப்பாவை வடக்கே போகும் ரயிலில் பார்த்ததாக ராமசாமி சாரிடம் யாரோ சொன்னாங்களாம். சார் தனக்குத் தெரியலேன்னு சொல்லிட் டாராம்'' என்றான்.

அப்பா எங்கே எனத் தெரியாமல் நாட்கள் போனபோது, ஒரு நாளின் மதியத்தில் அவளுக்கு ஒரு கார்டு வந்தது - அப்பாவின் கையெழுத்தில் சில வரிகள் எழுதியிருந்தார்:

''எல்லாவற்றுக்கும் பிறகு விடுபட்டு விட்டேன். ரொம்பவும் துயரமானதுதான். என்னுடைய இருப்பு எந்தப் பலனும் இல்லாமல்தான் போனது - கடன்களைத் தவிர. ஒரு கோழையைப் போல் ஓடிவிட்டேன்... அடையாளம் தெரியாத சுவர்களுக்குள் அலைகிறேன் - திரும்புதலின்றி. இது உனக்காக மட்டும். அவர்களைப் பொறுத்தமட்டில் நான் திரும்பி வரக் கூடும். நீ என்னுடைய பெண்...''

மடித்துத் தகரப் பெட்டியில் போட்டாள். அப்பாவின் ஸ்தூலமான உருவம், சிரிப்பு எதுவும் இல்லாதது பெரும் துக்கமாக அடைத்தது. அவள் அழுதாள். அம்மா வேலையைப் போட்டு விட்டு எட்டிப் பார்த்தாள். யாரோ அப்பாவின் பெயரைச் சொல்லி வெளியே விசாரித்துக்கொண்டிருந்தார்கள். பயமாக இருந்தது அவளுக்கு. அம்மா வெளியே போய் எதையோ சொல்லிக் கொண்டிருந்தாள். ஓரிரு வார்த்தைகள் மட்டும் அவளுக்குக் கேட்டன:

''அவர் வரட்டும். மொத்தமா கொடுத்துடச் சொல்றேன்.''